1975 மார்ச் 6]

பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. அந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியுமானால் நிச்சயமாகப் பலன் ஏற்பட்டு தொடங்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஒன்றியங்களில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 219 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் எந்தெந்த அரிசன காலனிகளில், வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து குடிமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன?

(இ) அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) ஓர் அறிக்கை @ சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த விவர அறிக்கையிலே உள்ள சில விவரங்களைப் பார்க்கும்போது சில ஊர்களிலே இந்த நில ஆர்ஜிதம் செய்கிற பிரச்சினை ஆண்டுக் கணக்கில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது என்றும் அதற்குக் காரணமாக, போதிய நிதி கொடுக்க வேண்டுமென்றும், வட்டத்திற்கு ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டு இன்ஸ்பெக்ஷன் போன்றவற்றைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த இரண்டையும் நிறைவேற்றி விரைவாக இந்தப் பணியை முடித்துக் கொடுக்க அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தனி அதிகாரிகளைப் போட அரசு ஆலோசித்து வருகிறது. அடுத்த ஆண்டிலிருந்து தீவிரமாகச் செயல்படும்.

@ 132–134 ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.